மார்ச் 2025
மலர் 23, இதழ் 6

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# தபசுகால சிந்தனைக்கு



# தபசுகால சிந்தனைக்கு

*''பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற, பாவத்தையும் தள்ளிவிட்டு.... இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் (எபி. 12 : 1).*

2025-ஆம் ஆண்டின் இரண்டு மாதங்களை நல்லபடியாக வழிநடத்திய தேவன் இந்த மூன்றாம் மாதத்திலும் நம் வாழ்வில் இடைபட வந்திருக்கிறார். ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.

கிறிஸ்தவ வாழ்வில் லெந்து காலம் / தபசு காலம் என்பது மிக முக்கியமானதொன்றாக உள்ளது. திருச்சபையின் முன்னோர்கள் கர்த்தர் நமக்காக பாடுபட்ட நாட்கள்; அதாவது உயிர்த்தெழுவதற்கு முன்பு, சாம்பல் புதன் கிழமையிலிருந்து 40 நாட்கள் தபசு / லெந்து காலமாக கணிக்கப்பட்டு கொடுத்திருக்கிறார்கள்.

லெந்து காலம் ஏன் முக்கியமானது? அதன் முக்கியச் சிறப்பு என்ன? இந்த காலங்களில் நாம் எப்படி இருக்க வேண்டும்? மற்ற நாட்களை விட இந்த தபசு காலங்களில் நாம் செய்ய வேண்டிய காரியங்கள் என்னென்ன? மற்ற நாட்களை விட இந்த 40 நாட்களில் நாம் கடைபிடிக்க வேண்டிய பொருந்தனைகள் என்னென்ன? அதன் சிறப்பம்சங்கள் என்ன?

1. நம்மை நாமே **ஆராயும் காலம்**
2. நாம் சில காரியங்களை **அகற்றும் காலம்**
3. நம்மை நாமே **ஆயத்தம் செய்யும் காலம்**

மேற்குறித்த மூன்றையும் சரிவரச் செய்ய வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கரத்திலும், உள்ளத்திலும் தான் இருக்கிறது. பிரசங்கி தன்னுடைய புத்தகம் 3-ஆம் அதிகாரத்தில் பதினான்கு வகையான காலங்களைக் குறித்து எழுதியிருக்கிறார். தேவன் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார். நமக்கும் நம் தேவைகளை சரியான காலத்தில் செய்து கொண்டு வருகிறார். கர்த்தரிடம் அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும் நாம் அவருக்காக வருடத்தின் 365 நாட்களும் நம்முடைய தேவைக்கு மட்டுமே காலங்களை தயார் செய்கிறோமே அன்றி, ஆண்டவருக்காக நாம், நேரத்தை ஒதுக்குவது மிகவும் குறைவு. ஆகவேதான், இந்த 40 நாட்களில் ஆண்டவருடைய பிரசன்னத்தில் நேரத்தை செலவிட முயற்சி செய்வோமாக!

***1. ஆராயும் காலம் :***

**"நீங்கள் உங்களை உய்த்து ஆராய்ந்து சோதியுங்கள் (செப். 2 : 2). ...ஆவி உற்சாகமுள்ளது தான், மாம்சமோ பலவீனமுள்ளது என்று இயேசு சொன்னார்'' (மத். 26 : 41).**

திருச்சபை நமக்குக் கொடுத்திருக்கும் பாரம்பரியம் முறைமைகளில் மிகவும் முக்கியமானது லெந்து காலம், நாம் யார், எப்பேர்ப்பட்ட குணநலன்களைக் கொண்டிருக்கிறேன் என்று தற்பரிசோதனை செய்ய வேண்டிய காலம் லெந்து காலம். உடம்பிலே ஏதேனும் ஒரு நோய் கண்டால் அது என்னவிதமான நோய் என்று கண்டுபிடித்து, அதன்பின் வைத்தியம் செய்ய வேண்டும். அதற்கேற்ற மருந்து மாத்திரைகளை மருத்துவர் மூலமாக பெற்று உபயோகிக்க வேண்டும்.

அதேபோல், கிறிஸ்துவ ஜீவியம் / வாழ்வு என்பது ஓட்டப்பந்தயம் போன்றது (எபி. 12 : 1). ஒரு ஓட்டப்

பந்தய வீரன், முதலில் தன்னை தற்பரிசோதனை செய்ய வேண்டும். பந்தயத்தில் கலந்து கொள்வதற்கு முன் தனக்கு பலம் இருக்கிறதா, பலவீனம் இருக்கிறதா என்று தற்பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அதுபோலதான் நம்முடைய ஆத்துமா பெலன்கொண்டு திடகாத்திரமாயிருந்தாலும், நமது உடலோ பெலனற்றதாயிருக்கிறது. மனித இயல்பு இப்படித்தான்.

இந்த லெந்து காலத்தில் நம்முடைய இயல்பான வாழ்விலிருந்து நம்மை விடுவித்துக் கொண்டு, தனிப்பட்ட வாழ்வுக்கு நேரத்தை ஒதுக்கி, கடவுளோடு அதிக நேரத்தை செலவிடும் போது, நாம் நம்மைக் குறித்து அதிகமாக அறிந்து கொள்ள முடியும்.

அப்போஸ்தலனாகிய பவுல் கூறியது போல் நல்ல போராட்டத்தைப் போராடினேன்; ஓட்டத்தை முடித்தேன் என்று தைரியமாக ஆண்டவரிடம் சொல்லலாம்.

தாவீது இஸ்ரவேலில் மிகப்பெரிய ராஜாவாக இருந்த போதிலும் தன்னுடைய தேசத்துக்காக, கர்த்தருடைய கிருபைக்காக, அன்பிற்காக, இரக்கத்திற்காக நேரத்தை கர்த்தருக்கென்று ஒதுக்கி வாழ்ந்தார். அதனால்தான், 40 வருட காலம் நல்லபடியாக இஸ்ரவேல் மக்களை நியாயம் விசாரிக்க முடிந்தது.

மரணம் என்றால் எல்லோருக்கும் பயம்தான். ஆனால், எசேக்கியா ராஜாவிடம் நீர் உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குபடுத்தும்; நீர் பிழைக்க மாட்டீர் என்று ஏசாயா தீர்க்கன் சொன்னபோது, ராஜா செய்த முதல் காரியம், நேரத்தை ஒதுக்கி தேவனோடு பேசினார். தேவன் எல்லாவற்றையும் நல்லபடியாகச் செய்தார்.

நம்முடைய உடைமைகளையும், குடும்பத்தையும், நம்மையும் காப்பாற்றுவதற்கு நேரத்தைச் செலவிடவும், உழைக்கவும் தயாராக இருக்கும் நாம், நமது ஆத்துமாவைக் குறித்து கவனமாயிருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஜெபக்குறைவு ஏற்பட்டால் சோதனைகள் பெருகும். மனிதனின் ஆவி என்பது அவனது அறிவுப் பகுதியாகும். ‘நான்’ என்று மனிதனை எண்ணும்படிச் செய்வதும், என்ன செய்ய வேண்டும் என்று முடிவு எடுப்பதும் மனிதனின் ஆவியின் செயல்களாகும்.

சோதனையை ஆரம்பக்கட்டத்திலேயே எதிர்த்து நின்றால் அதை மேற்கொண்டு விடலாம். நான் தேவ பிரசன்னத்தில் வாழ்கிறேன், தேவன் என்னைக் காண்கிறார் என்ற உணர்வுடன் ஆராய்ந்து வாழ்ந்தால், யோசேப்பைப் போல, சோதனை வரும் போது அந்த இடத்தை விட்டு ஓடிவிடுவோமானால், சோதனைகளை எளிதில் மேற்கொள்ளமுடியும். சோதனையில் விழுந்து விடாமல் இருக்க விழித்திருந்து ஜெபிக்க வேண்டும்.

ஒரு ஆடு வரப்பில் செல்லும் போது, கால் தவறி சேற்றில் விழுந்துவிட்டால் எழும்பி வருவதற்கு முயற்சிக்கும். முடியாவிட்டால் கதறும்/குரல் கொடுக்கும். ஆட்டின் மேய்ப்பர் அதைத் தூக்கி மீண்டும் வரப்பின் மீது நடக்கும்படிச் செய்வார். அதேபோல் நல்ல உலக மேய்ப்பரான கிறிஸ்து சோதனைகளில் விழுந்தபின், தம்மை நோக்கிக் கூப்பிடுகிற ஒவ்வொருவரையும் நிச்சயம் தூக்கி எடுத்து நல்லபாதையில் நடத்துவார்.

அதேநேரம் இதற்கு மாறக வரப்பில் சென்றது ஒரு பன்றியாக இருக்குமானால் அதுவே தானாக, மகிழ்ச்சியாக சேற்றுக்குள் இறங்கி உழன்று உறங்கிக் கொண்டிருக்கும். வெளியே வராது. வெளியே வரவும் விரும்பாது. முயற்சிக்கவும் செய்யாது. நேரத்தை ஒதுக்கி வாழாத துன்மார்க்கனின் நிலை இப்படிப்பட்டதுதான்.

என்ன ஆனாலும், ஆடு ஆடுதான்! பன்றி பன்றிதான்!

*2. அகற்றும் காலம் :*

உங்கள் இருதயத்தைக் கர்த்தருக்கு நேராக்கி அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யுங்கள். அப்பொழுது அவர் உங்களை பகைவரின் கைக்கு நீங்கலாக்கி விடுவார்.

**அந்நிய தேவர்களையும், அஸ்தரோத்தையும் உங்கள் நடுவிலிருந்து அகற்றி/விலக்கி விடுங்கள் (I சாமு 7 : 3).**

தவறான காரியங்களை அகற்றும் காலம் லெந்து காலம். நாம் எல்லோரும் தற்போது கணினி யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அவ்வப்போது கணினியில் கிருமி சோதனை (Virus Scan) செய்யப்படுகிறது. அப்போது, தேவையற்ற கிருமிகள் ஏதேனும் இருந்தால் அதை உடனடியாக அகற்ற வேண்டும். அதுபோல, நம்முடைய ஆன்மீக வாழ்விலும் சிக்கலான கிருமிகளைக் கண்டுபிடித்து அதனை நம் உள்ளத்திலிருந்து அகற்ற வேண்டும்.

1 சாமு. 7 : 3-இல் தீயவழியிலிருந்து முற்றிலும் மனம் மாறி, ஆண்டவரிடம் திரும்புங்கள் என்று கர்த்தர் நம்மை அழைக்கிறார். கடைசி நியாயாதிபதியான சாமுவேல்தான் 16 நியாயாதிபதிகளில் சிறந்தவர். இவர் தேவனுடைய ஜனங்களிடத்தில் அந்நிய தெய்வங்களை விலக்கும்படி/உள்ளத்திலிருந்து அகற்றும்படி அடிக்கடி கேட்டுக் கொண்டேயிருந்தார். எத்தனை முறை விளக்கினாலும் மீண்டும் மீண்டும் அவற்றைப் பின்பற்றிக் கொண்டேயிருந்தார்கள். சோதனைகளில் சிக்கி விழுந்து போனார்கள். பெருமை, பொறாமை, இச்சைகள், பொருளாசை போன்றவை நமக்குள் வருவதற்கு முயற்சித்துக் கொண்டேயிருக்கும். விழிப்பாக இருக்க வேண்டும். விழிப்பாக இல்லாவிட்டால் தவறிப் போகவும், தவறான பாதையில் செல்லவும் வாய்ப்புண்டு. நம்மை நாமே நிதானித்து அறிந்தால் (1 கொரி 11 : 31) நியாயம் தீர்க்கப்படோம். அதற்கு ஒரே வழி (REPENT) மனந்திரும்புதல்.

*மனம் மாற வேண்டும் :*

ஒவ்வொரு நாளும் கடமைக்கென்று மறக்காமல் வேதம் வாசிக்கிறோம்; ஜெபம் செய்கிறோம். 20, 30 வருடங்களானாலும் மனம் மாற்றமடையாமல் இருந்தால் வாழ்ந்த நாட்களுக்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

இந்த 40 நாட்களாகிய லெந்து காலத்தை கிறிஸ்தவர்களாகிய நாம் மட்டும் பின்பற்றுகிறோம் என்று நினைக்க வேண்டாம். புறஜாதியாரும் பின்பற்றுகிறார்கள்.

பிற மதத்தினரும் தாங்கள் ஆசரிக்கும் 40 விரத நாட்களில் அதிகாலையில் குளிர்ந்த நீரில் குளித்து, பலவிதமான ஆசரிப்பு, தொழுகைகளை தங்கள் கோவில்களில் நோன்புகளை மேற்கொள்கிறார்கள்.

அந்த 40 நாட்களும் தங்களை அடிமைக்கு உட்படுத்திய தீயப்பழக்கங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து மற்றவர்களிடம் பேசும் முறைகளிலும் கூட (Way of Talking) ஒரு மரியாதை, கனிவு காணப்படுவதைக் காண்கிறோம்.

ஆனால், கிறிஸ்தவ வாழ்வில் ஒருவன் கடவுளின் அருளைப் பெற வேண்டுமானால், மனம் மாற்றம் அடையாமல் பெற முடியாது. ஆன்மிக வாழ்வில் வளர முடியாது. தீய வழியிலிருந்து முற்றிலும் மனதை அகற்ற வேண்டிய பொறுப்பு நம்மிடம் உள்ளது.

**இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்** என்று இயேசுவானவர் மலைப்பிரசங்கத்தில்

(மத். 5 : 8) கூறுகிறார். இருதயத்தில் எல்லாவிதமான அழுக்கையும் வைத்துக் கொண்டு தேவனை தரிசிக்க இயலாது.

மூன்றாவது முற்பிதாவான யாக்கோபு தன் சகோதரனான ஏசாவுக்குரிய ஆசீர்வாதத்தையும் தன் தகப்பனாகிய ஈசாக்கிடமிருந்து பெற்றபடியால், கோபம் கொண்ட ஏசா என்ன மன நிலையடைந்தான்?...

**"...என் சகோதரனாகிய யாக்கோபைக் கொன்று போடுவேன் என்று ஏசா தன் இருதயத்திலே சொல்லிக் கொண்டான்" (ஆதி 27 : 41).** காலம் உருண்டோடின. ஏசாவைக் காண்பதற்கு யாக்கோபு தனித்து யாப்போக்கு என்னும் ஆற்றினண்டையில் அமர்ந்து ஏசாவுக்கு நல்ல ஒரு மனமாற்றத்தைத் தருமாறு ஜெபித்தார். தேவன், யாக்கோபைக் காண வந்தார். யாக்கோபு கர்த்தரை விடியும் வரை இறுகப் பிடித்தார். ஏசாவின் உள்ளத்திலே ஒரு மனமாற்றத்தைத் தேவன் கொண்டு வந்தார். தன் தவறை ஏசா உணர்ந்து, மறுநாள், தூரத்திலே தன் தம்பியாகிய யாக்கோபைக் கண்டு எதிர்கொண்டோடி வந்து யாக்கோபைத் தழுவிக் கொண்டான் (ஆதி 33 : 4).

தீய எண்ணங்கள், பழைய குரோதங்கள், பகைமைகளை நம் உள்ளத்திலிருந்து தூக்கி எறிவோம்.

இந்த லெந்து காலம் நம்மை ஆராய்ந்து நம்முடைய குறைகள், குற்றங்கள் அனைத்தையும் ஆய்வு செய்ய இந்த 40 நாட்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மற்றும் யோவான் ஸ்நானனின் முதல் சுவிசேஷ நற்செய்தி மனமாற்றம் (Repentance) தான். அந்த மனமாற்றத்தை இந்த தபசு காலத்திலே நம் உள்ளத்திலே கொண்டு வருவோம்.

### *3. ஆயத்த காலம் :*

**சத்தியம்** என்னும் கச்சையை அரையிலும் கட்டி, **நீதி** என்னும் மார்க்கவசத்தைத் தரித்து, சமாதானத்துக்குரிய **ஆயத்தம்** என்னும் பாதரட்சையைக் கால்களில் தொடுத்து தேவ வசனமாகிய **ஆவியின் பட்டயத்தை** கையில் எடுத்துக் கொள்ள வேண்டும் (எபேசியர் 6 : 14, 15, 17).

நம் வாழ்க்கையில் வந்த குறைகள், குற்றங்கள், எல்லாவற்றையும் அகற்றிய பின்பு தேவனுடைய நற்செய்தி மற்றும் ஆன்மிகப் பயணத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்த வேண்டிய காலம். நம்மை கிறிஸ்துவின் உறவோடு வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**சத்தியம் :** **"...நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" (யோ. 14 : 6).** நாம் உண்மையுள்ளவர்களாய் இருப்பது மட்டுமின்றி சத்தியமாகிய கிறிஸ்துவை உடையவர்களாயிருக்க வேண்டும்.

**நீதி :** விசுவாசத்தினால் வரும் தேவ நீதியை தரித்துக் கொண்டவர்களாய் மாறவேண்டும்.

**ஆயத்தம் :** சமாதானத்திற்குரிய இரட்சிப்பைக் குறித்து ஆயத்தமாகி, நன்கு கற்றறிந்து மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் புத்தியுள்ள கன்னிகைகளாக காணப்பட வேண்டும்.

**ஆவியின் பட்டயம் :** ஒரு எதிரியைத் தாக்க வேண்டுமானால் திருவசனமாகிய ஆவியின் பட்டயம் ஒன்று மட்டுமே போதும். அது ஒன்றே சிறப்பான போராயுதம். பட்டயத்தை கையில் வைத்துக் கொண்டிருந்தால் மட்டும் போதாது, அதை எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்று அறிந்திருக்க வேண்டும். சோதனைகள் வரும் போது, அதற்கேற்ற வேத வசனங்களை உபயோகித்து, பிசாசை வீழ்த்த வேண்டும்.

இவைகளையெல்லாம் செய்வதற்கு நல்ல பயிற்சி மற்றும் அனுபவம் தேவை.

இதற்கு தாவீது ராஜாவின் அனுபவம் என்ன? ஏலா பள்ளத்தாக்கில் 40 நாட்களாக வந்து நின்ற சாத்தானாகிய பெலிஸ்தியனை தாவீது தேவ வசனத்தினால் அடித்தான். கர்த்தர் பட்டயத்தினாலும், ஈட்டியினாலும் இரட்சிக்கிறவர் அல்ல. இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லோரும் அறிந்து கொள்ளுவார்கள் என்று தேவ வசனமாகிய பட்டயத்தை போர்க்களத்தில் வைத்தான்.

எலியா-மெய்யான தேவன் யாரென்று பாகால் ஜனங்களுக்கு காண்பிப்பதற்கு நல்ல பயிற்சியும் அனுபவமும் பெற்றிருந்தபடியால் பர்வதத்தில் ஒரு பலிபீடத்தைக் கட்டி, தேவனை இறங்கி வருமாறு தேவ வசனங்களால் அழைத்தார்.

இஸ்ரவேலில் நீர் தேவன் என்றும் நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும் இந்த ஜனங்கள் நம்புவதற்கு வாரும் என்று எலியா அழைத்தார். கர்த்தர் இறங்கினார். தேவ வசனமாகிய பட்டயத்தை ஏற்ற இடத்தில் விதைக்க நாம் ஆயத்தம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

## *<u>ஆயத்தக் காலத்தில் கிறிஸ்துவை சாத்தான் சோதித்தது எப்படி?</u>*

**அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருந்ததே என்றார் (மத். 4:10).**

நாம் ஆயத்தமாக இருக்க சோதனைகள் நம்மைத் தொடர்ந்து வந்தடையும். சர்வத்தையும் படைத்த நம் தேவாதி தேவனிடம் சாத்தான் வந்து மூன்று காரியங்களைப் பேசுகிறான். தன்னைப் பணிந்து கொண்டால் ஆண்டவருக்கு என்னென்ன கிடைக்கும் என்று உலகத்தையும் அதிலுள்ள அனைத்தையும் காட்டி, தேவாலயத்து உப்பரிகையிலிருந்து தாழக்குதியும், கல்லுகளை அப்பங்களாகச் செய்யும், உயர்ந்த மலையிலிருந்து சகல ராஜ்யங்களையும், அதின் மகிமையையும் காண்பித்து கிறிஸ்துவானவரை சோதிக்கிறவனாக வருகிறான்.

கிறிஸ்துவானவர் ஒரே வார்த்தையில் அப்பாலே போ சாத்தானே என்று கட்டளையிட்டார். நாம் யாரோடு மோதுகிறோம், சண்டைபோடுகிறோம், விரோதத்தைக் காட்டுகிறோம் என்று யோசித்துச் செயல்பட வேண்டும்.

தபசு காலம் என்பது கர்த்தருக்கென்று ஒதுக்க வேண்டிய நாட்கள், தருணங்கள். அதை வீணாக்கிவிடக்கூடாது. வெறும் சடங்காகக் கருதாமல், உண்மையான பொருள் உணர்ந்து அதைக் கடைப்பிடிப்பது அவசியமானதாகும். கடவுள் நம் வாழ்வில் எதை விரும்புகிறார் எதை விரும்பவில்லை என்பதை இந்த தபசு காலத்தில் ஆராய்ந்தறிவோம். கர்த்தர் விரும்பாதவற்றை இந்த தபசு காலத்தில் நம் உள்ளத்திலும், இல்லத்திலுமிருந்து அகற்றுவோம். கர்த்தர் விரும்பும் காரியங்களை இந்த ஆயத்தக் காலத்தில் வளர்த்து நல்ல கனி கொடுக்கும் மரமாக்குவோம்.

இந்த லெந்து காலம் நம் அனைவரின் உள்ளத்திலும் ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டு வரும் காலமாக அமைய கர்த்தர் தாமே துணை செய்வாராக!

*உன் வாழ்க்கையை ஆராய்ந்து வாழ்;*
*தீயகாரியங்களை அகற்றி வாழ்;*
*கர்த்தரைக் காண ஆயத்தத்துடன் வாழ்.*

*ஆமென்.*

**– சகோதரி. பேர்ல் குயிலிராஜா**

# ஆசிரியர் மடல்

கர்த்தருக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு,

ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினாலே சத்திய வார்த்தை பத்திரிகையின் சார்பாக எங்கள் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**"எகிப்து தேசமெங்கும் பரிபூரணமான விளைவு உண்டாயிருக்கும் ஏழு வருஷம் வரும்'' (ஆதி. 41 : 29).**

எகிப்தின் அதிபதியாகிய பார்வோனுக்கு கர்த்தர் ஒரு சொப்பனத்தைக் காண்பித்தார். அதில் அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறிவந்து புல் மேய்ந்தது. அதற்குப் பின்பு அவலட்சணமும் கேவலமுமான வேறே ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறி வந்து, அழகும் புஷ்டியுமான அந்த ஏழு பசுக்களை பட்சித்துப் போட்டது. அந்த சொப்பனத்தின் அர்த்தத்தை எகிப்தின் மந்திரவாதிகளாலும், சாஸ்திரிகளாலும் சொல்லக் கூடாமற்போயிற்று. சிறையிலிருந்த யோசேப்பே அதின் அர்த்தத்தை ராஜாவுக்கு வெளிப்படுத்தினான்.

சொப்பனத்தின் அர்த்தமாவது, ஏழு வருஷம் தேசத்தில் பரிபூரண விளைவு உண்டாயிருக்கும். அதற்குப் பின்பு பஞ்சம் உண்டாயிருக்கும் ஏழு வருஷம் வரும். அந்த பஞ்சம் தேசத்தின் பரிபூரணத்தையெல்லாம் பாழாக்கும் என்றான். பரிபூரணமான விளைச்சலுள்ள அந்தத் காலங்களில் தானியங்களை சேர்த்து வைக்க தேசத்தின் மேல் விசாரணைக்காரனை ஏற்படுத்த வேண்டும் என்றான். யோசேப்பின் ஞானத்தைக் கண்டு, பார்வோன் அவனை எகிப்து தேசத்தின்மேல் அதிகாரியாக வைத்தான். யோசேப்பு பரிபூரண விளைச்சலுள்ள அந்த ஏழு வருஷத்தில் தானியத்தை சேர்த்து வைத்தான். அதினால் எகிப்து தேசம் பஞ்ச காலத்திலிருந்து தப்பித்தது.

**இதோ, நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்; ஆகாரக் குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமுமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்கிறார். (ஆமோஸ் 8 : 11).**

இந்தக் கடைசி நாட்களிலும் அநேக கள்ளத் தீர்க்கதரிசிகளும், கள்ள போதகர்களும் எழும்பி, கர்த்தருடைய வசனத்தைப் புரட்டி, ஜனங்களை மோசம் போக்கிக் கொண்டிருக்கிறார்கள். கர்த்தருக்கு பயப்படுகிறதையும், பரிசுத்த வாழ்க்கையையும் அசட்டை பண்ணி உலக சிற்றின்பத்திலும், ஐசுவரிய மயக்கத்திலும் ஜனங்களை தவறாக வழி நடத்துகிறார்கள்.

**ஏனெனில், கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் (மத். 24 : 24).**

தேவ பிள்ளைகளாகிய நாம் இந்த கர்த்தருடைய அனுகிரக காலத்தில் வேத வசனத்தை கற்றுக் கொண்டு அதில் தேறினவர்களாய் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் வசனம் கிடைக்காத அந்தப் பஞ்ச காலத்தில் பிசாசின் பொய் உபதேசங்களை கண்டறிந்து, அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

சகோ. விஜயராஜின் மறைவிற்குப்பின் இருளா குஞ்சப்பனை மொழிக்கு மொழிபெயர்ப்பாளர் இல்லாததினால் அவரால் மொழிபெயர்ப்பு முடிக்கப்பட்ட சங்கீதம், நீதிமொழிகள் சரிபார்ப்புச் செய்யப்படாமல் இருந்து வருகிறது. கடந்த 24.1.2025 அன்று திரு. ராஜா என்பவர் இம்மொழிபெயர்ப்புப் பணிக்கு தெரிவு

செய்யப்பட்டு, பிப்ரவரி மாதத்திலிருந்து, சரிபார்ப்புப் பணியை செய்ய ஆரம்பித்துள்ளார். இவர் வெள்ளியங்காடு இருளா மொழிபெயர்ப்பாளரான திரு. சாமுவேலின் மகன்.

கடந்த பிப்ரவரி 10-ஆம் தேதி முதல் ராஜஸ்தான், உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் கர்நாடகா மாநிலங்களிலிருந்து 8 மொழிபெயர்ப்பாளர்கள் கோவை IBT மையத்திற்கு வந்து, தங்கள் மொழிபெயர்ப்புச் சார்ந்தப் பணிகளை மேற்கொண்டார்கள். இம்மாதம் 26-ஆம் தேதி வரை இங்கிருந்து பணிகளைச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. புதிதாக தெரிவு செய்யப்பட்ட “பீல்” என்ற மொழியில் வேதத்தை மொழிபெயர்ப்புச் செய்ய தேர்வு செய்யப்பட்டுள்ள சகோ. அகலேஷ் என்பவருக்கு மொழிபெயர்ப்புக் குறித்த பயிற்சி கொடுக்க வேண்டியுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் தடையின்றி நடைபெறவும், இவ்வருடத்தில் பல மொழிகளுக்கு மொழிபெயர்ப்பாளர்கள் கிடைக்கவும், ஊழியம் நாளுக்குநாள் விருத்தியடைந்து, பலதரப்பட்ட மக்களை கர்த்தருக்குள் வழிநடத்தவும், தேவநாமம் மகிமைப்படவும் ஜெபியுங்கள்.

கர்த்தர் உங்களை எல்லாத் தீமைக்கும் விலக்கிக் காத்து, நன்மை தொடர உயர்த்தும்படி ஜெபிக்கிறோம்.

கர்த்தரின் பணியில்,
உங்கள் சகோதரன் *K. ஜெய்சிங்*

# உலகச் செய்திகள்

★ ஆந்திரா மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் அமைந்துள்ள இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் (இஸ்ரோ) சதீஷ்தவன் விண்வெளி ஆய்வு மையத்தில் மூன்றாவது ராக்கெட் ஏவுதளத்தை ரூ. 3,985 கோடி செலவில் அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

★ மத்திய அரசு ஊழியர்களின் ஊதியம், ஓய்வூதியதாரர்களுக்கான படிகளை மாற்றியமைப்பதற்காக எட்டாவது ஊதியக்குழு அமைக்க மத்திய அரசு தீர்மானித்துள்ளது. இதன் மூலம் தற்போது பணியாற்றி வரும் 49 லட்சத்துக்கும் அதிகமான மத்திய அரசு ஊழியர்களும், 65 லட்சம் ஓய்வூதியதாரர்களும் பயன் பெறுவர்.

★ இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பினரிடையே கடந்த 15 மாதங்களாக நடைபெற்று வரும் போரை நிறுத்த மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஜனவரி 19 முதல் அதிகாரபூர்வமாக அமலுக்கு வந்தது.

★ 'கோகோ விளையாட்டின் அறிமுகக் கோப்பை போட்டியில் ஆடவர் மற்றும் மகளிர் என இரு பிரிவுகளிலுமே இந்தியா, நேபாளத்தை வீழ்த்தி ஜனவரி 19-ஆம் தேதியன்று சாம்பியனாகி வரலாறு படைத்தது.

★ அமெரிக்காவின் 47-வது அதிபராக டொனால்ட் டிரம்ப் ஜனவரி 20-ஆம் தேதியன்று பதவியேற்றார். அவருடன் துணை அதிபர் ஜே.டி. வான்ஸும் பதவியேற்றுக் கொண்டார். வாஷிங்டனின் உள்ள நாடாளுமன்ற கட்டிடத்தில் (கேப்பிடல்) பிரம்மாண்டமான முறையில் பதவியேற்பு விழா நடைபெற்றது.

★ தமிழ் நிலத்தில் தொடங்கியது இரும்புக்காலம்! தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் இரும்புக்காலம் தொடங்கியதாக முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார். 5,300 ஆண்டுகளுக்கு முன்பே உருக்கு இரும்புத் தொழில் நுட்பம் தமிழ் மண்ணில் அறிமுகமாகிவிட்டதாக ஆதாரங்களுடன் அவர் வெளியிட்டார்.

# பணித்தளச் செய்திகள்

*மிஷனெரி : சகோ. சந்திரிகாதாஸ்*
*பணித்தளம் : பிந்ரா (உத்திரப்பிரதேசம்)*

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் மிஷனெரிப் பணிக்காக சில்பிலா, மச்சாலிரோ, ராம்னிபட்டி, திகாரிடா, கங்கபூர், ஜலால்பர், தர்ஷாவனா, போர்ப்பூர், கச்சால், பர்சாஹனி மற்றும் மர்காபிண்டி ஆகிய கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியைக் கூறி, இதோடு இயேசுவின் அன்பையும் விளக்கிக்கூறி, "TANAWSEMUKAT"என்ற கைப்பிரதியையும் விநியோகித்தேன். வாங்கியவர்களிடம், இதை நன்கு வாசித்துப்பாருங்கள் என்று கூறினேன். சகோதரிகள் நளம்யாது, சோனிதேவி, சகோ. சவசாரி யாதேவ், மற்றும் சுனில் குமார் ஆகியோர் வாஞ்சையுடன் கேட்டார்கள். டிசம்பர் 25-ஆம் தேதியன்று சிறப்பு ஆராதனை நடத்தப்பட்டது. 2-வது சனிக்கிழமை உபவாச ஜெபக்கூட்டம், வீட்டு ஜெபக்கூட்டங்கள் நடத்தப்பட்டன.

என் மிஷனெரிப் பணி, மேலே குறிப்பிடப்பட்ட நபர்களின் கர்த்தருக்குள்ளான வாழ்க்கைக்காகவும் மற்றும் என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மொழிபெயர்ப்பாளர் :*
*சகோ. S.N. சங்கர்*
*மொழி : சௌராஷ்ட்ரா*
*பணித்தளம் : திருச்சி (தமிழ்நாடு)*

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் சங்கீதப் புத்தகத்தில் சரிபார்ப்புச் செய்யப்பட்டது. வெளியிடப்பட்ட வேதாகமத்தில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டதில் சங்கீத புத்தகம் மொழிபெயர்ப்பு எனக்கு திருப்தியளிக்கவில்லை. நற்செய்திப் பணிக்காக சென்று, சகோதரிகள் சகுந்தலா, விஜயா, சகோ. பாபு, கோவிந் மற்றும் மணிகண்டன் ஆகியோரைச் சந்தித்து நற்செய்தியை அறிவித்து, கைப்பிரதிகளை அவர்களுக்குக் கொடுத்து, அவர்களுக்காக ஜெபித்தேன்.

சௌராஷ்ட்ரா வேதாகமம் மறுபதிவு செய்வதற்குமுன் ஏற்கனவே வெளியிடப்பட்ட வேதாகமத்தில் உள்ள தவறுகளைக் கண்டறிந்து, திருத்தம் செய்யும் பணி முடிக்கப்பட வேண்டியுள்ளது. இது Digital Mobile App தயாரிப்பதற்கும், செய்யப்பட வேண்டிய முக்கியமான பணியாக உள்ளது. ஆகவே, இப்பணியை முடிப்பதற்கும், சௌராஷ்ட்ரா மொழிபேசும் மக்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மொழிபெயர்ப்பாளர் : சகோ. L. பரமேஸ்*
*மொழி : லம்பானி*
*பணித்தளம் : ஷிர்லகோப்பா (கர்நாடகா)*

இயேசு கிறிஸ்துவின் திருநாமம் மகிமைப்படுவதாக!

கர்த்தரின் பெரிதான கிருபையால் கடந்த மாதத்தில் மொழிபெயர்ப்புப் பணியும், மிஷனெரிப் பணியும் தடையின்றி நடந்தன. மொழிபெயர்ப்புப் பணியில், பழைய ஏற்பாடு பகுதியில் 1 இராஜாக்கள் அதிகாரம் 1:1வசனம் முதல் அதி. 9:1-ஆம் வசனம் வரையிலும் கணினியில் கீ-இன் செய்தேன்.

மிஷனெரிப் பணிக்காக கஜ்குர், பிதர்கோப்பா, மஞ்சிகோப்பா, ஷிவாலி, பத்ரபூர், பாலிமதி, மெகவாட் ஆகிய கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியை அறிவித்து, புதிய ஏற்பாடு மற்றும் கைப்பிரதிகளைக் கொடுத்தேன். இதில் சகோ. ரத்நாயக், கலம்மா, தக்ரிபாய், குமாரிபாய் மற்றும்

ஜெயம்மா ஆகியோர் மிகவும் வாஞ்சையோடு கேட்டனர். இதேவேளையில் எதிர்ப்பு தெரிவித்தவர்களும் இருந்தார்கள். அவர்களும் கர்த்தரை அறிந்து, சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளவும், என் மொழிபெயர்ப்புப் பணி துரிதமாய் நடக்கவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*முன்னேற்றப் பணியாளர் :*
*சகோ. J. ராமலிங்கம்*
*பணித்தளம் : கோத்தகிரி (தமிழ்நாடு)*

கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக!

IBT ஊழியத்தின் பங்காளர்கள் மற்றும் தாங்குநர்கள் கடந்த ஆண்டு டிசம்பர் வரையிலும் மனமுவந்து தாராளமாய் IBT ஊழியத்தைத் தாங்கி வந்தார்கள். கிறிஸ்துமஸிற்காகவும் உற்சாகமாய்க் கொடுத்தார்கள். முன்னேற்றப் பணிக்காக அளக்கரை, கேசலாடா, சேலாடா, ஓரசோலை, அன்னொடை, சீகொலா, கூக்கல்தொரை, குஞ்சப்பனை, டானிங்டன், கோத்தகிரி, மினிதேனு, கீழ்கோத்தகிரி, உதகை யூனியன் சபை, உதகை, ரோகினி, கேத்தி, சாந்தூர், அருவங்காடு, காணிக்ராஜ் நகர், அட்டடி, மந்தரை, கீக்கரை ஆகிய கிராமங்களுக்குச் சென்று, IBT-க்குரிய 2025-ஆம் வருடத்திற்குரிய காலண்டர்கள் கொடுத்து, காணிக்கைப் பெற்று, அவர்களுக்காக ஜெபித்தோம். இலக்கியப் புத்தகங்கள், பாடல் புத்தகங்கள் தேவைப்படுவோருக்கும் அலுவலகத்திலிருந்து பெற்று, தேவைப்படுவோருக்கு கொடுக்கிறோம். அதேபோல் சத்திய வார்த்தை பத்திரிகை வேண்டுபவர்களுக்கு விலாசத்தை அலுவலகத்திற்கு அனுப்பி பெற்றுக் கொடுக்கிறோம். விலாசம் மாறுபவர்களின் விபரங்களையும் பெற்று, IBT அலுவலகத்திற்கு தெரியப்படுத்தி, தொடர்ந்து அவர்களுக்கு சத்திய வார்த்தை பத்திரிகை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்வேன்.

புதிய வருடத்தில் புதுமையாக ஊழிய வளர்ச்சி விரிவடைய வேண்டும். மக்களின் வாழ்வும் புதிய திருப்பம் பெற வேண்டும். எங்கள் முன்னேற்றப் பணிக்காக, தொடர்ந்து ஊக்கமுடன் கர்த்தரின் பணியை சிறப்பாகச் செய்ய ஜெபியுங்கள்.

----------•----------

*மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :*
*சகோ. பீதாம்பர் மகனந்*
*மொழி : கலகாண்டியா*
*பணித்தளம் : லடுகன் (ஒடிஷா)*

கர்த்தருக்கு துதி உண்டாவதாக!

கடந்த டிசம்பர் மாதம் கோவை IBT மையத்திற்குச் சென்று, மொழிபெயர்ப்புப் பணிகளைச் செய்தோம். கலகாண்டியா மொழியில் ஏற்கனவே மொழிபெயர்ப்புச் செய்து, கணினியில் கீ-இன் செய்ததை Paratext Software-க்கு கீழ்க்கண்ட புத்தகங்கள் மாற்றப்பட்டன. பழைய ஏற்பாடு பாகத்தில் எரேமியா புத்தகம் அதிகாரம் 20 : 9 முதல் அதி. 52 : 34-ஆம் வசனம் வரையிலும், புலம்பல் அதி. 1 : 1 முதல் அதி. 5 : 22-ஆம் வசனம் வரையிலும், எசே. அதி. 1 : 1 முதல் அதி. 23 : 30 வரையிலும் Paratext-ற்கு மாற்றப்பட்டன. மொத்தம் வார்த்தைகள் 1609. 12.12.2025 அன்று IBT-யில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் நிகழ்விலும் பங்கேற்க முடிந்தது. 14-ஆம் தேதி கோவையிலிருந்து புறப்பட்டு என் பணித்தளம் வந்தபின்பு மிஷனெரிப் பணிக்காக கிராமத்திற்குச் சென்று சிலரைப் பார்த்து, நற்செய்தியைப் பகிர்ந்து கொண்டேன். சில குடும்பங்களுக்காக ஜெபித்தேன். ஹபல்பூர் என்ற கிராமத்தில் பார்சு, தினேஷ், கணேஷ்யம் மற்றும் அலோக்நாத் ஆகியோர் மிகவும் வாஞ்சையுடன் கர்த்தருக்குள் வாழ வாஞ்சிக்கிறார்கள்.

ஞாயிறு ஆராதனை தொடர்ந்து என் பணித்தளத்தில் நடத்தப்படுகிறது. என் மொழிபெயர்ப்புப் பணி துரிதமாக முடிக்கப்பட, கர்த்தர் எனக்கு ஞானத்தையும், அறிவையும்

கொடுக்கவும், என் பிள்ளைகள் படிப்பிற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மொழிபெயர்ப்பாளர் : சகோதரி. அனுராதா*
*மொழி : படுகா*
*பணித்தளம் : அருவங்காடு (தமிழ்நாடு)*

என் பணிகளைத் தொடர்ந்து செய்ய கிருபையளித்துவரும் தேவனுக்கு நன்றிகளையும், துதிகளையும் ஏறெடுக்கிறேன்.

கடந்த டிசம்பர் மாதத்தில் 2025-ற்கான காலண்டர்கள் மற்றும் Gift Cover-களை 25 பேருக்கு நேரில் சென்று கொடுத்தேன். சபைக்கு வர அச்சப்படும் சிலருக்கு உற்சாக வார்த்தைகளைக் கூறி, கர்த்தருக்கு சாட்சியாய் வாழ தைரியப்படுத்தினேன். பழைய ஏற்பாட்டிலுள்ள புத்தகங்களில் 3-4 அதிகாரங்களை வாசித்து WhatsApp மூலமாக 300 பேர்களுக்கு 400 நாட்களில் முடிக்க திட்டமிட்டுச் செய்து வருகிறேன். சங்கீதப் புத்தகம் 119 முதல் ஏசாயா 32 வரையுள்ள பாகத்தை 10 பேருக்கு அறிமுகப்படுத்தினேன்.

எல்லாரும் இரட்சிக்கப்படும்படியாக கடந்த மாதம் 4 நாட்கள் ஜெபக்கூட்டம் ஒழுங்கு செய்து தேவ செய்தியளித்து, ஜெபம் ஏறெடுக்கப்பட்டன. முன்னேற்றப் பணிக்காக மேல் ஹொசஹட்டி, கீழ் ஹொசஹட்டி, ஹராகுச், பெல்லாடா, ஊட்டி, அருவங்காடு, சாந்தூர் ஆகிய கிராமங்களுக்குச் சென்று, IBT தாங்குநர்களைச் சந்தித்து காணிக்கைப் பெற்று, ஜெபித்து வந்தேன்.

டிசம்பர் மாதம் கிறிஸ்துமஸ் ஆராதனை, 31-ஆம் தேதி இரவு புதுவருட ஆராதனையும் நடத்தப்பட்டது. சுகவீனமாயிருந்த 3 பேருக்கு ஜெபிக்கும்படியாக அவர்கள் வீட்டிற்குச் சென்று அவர்களின் சுகத்திற்காக ஜெபித்தேன். பலருக்கு தேவ நம்பிக்கை இருந்த போதிலும் சமுதாயத்திற்குப்பயந்து, ஈடுபடமுடியாத நிலையிலும் இருக்கிறார்கள். மதுபானத்திற்கு அடிமைப்பட்டவர்களும் படுகர்களில் அநேகர் இருக்கிறார்கள். இவர்களின் அடிமைத்தனம் மாறவும், இவர்கள் கர்த்தரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு நல்வாழ்க்கை வாழவும் ஜெபித்துக் கொள்ளவும்.



# கன்னியாகுமரி மாவட்டத்தின் கிறிஸ்தவத்தின் தந்தை ரிங்கெல் டௌபே (கி.பி. 1770)

தற்போது கேரளம் என்று அழைக்கப்படும் மலபாரை உள்ளடக்கிய திருவாங்கூர் தனி இராஜ்யமாக இருந்தது. தென் திருவாங்கூர் பகுதிதான் இப்போதுள்ள கன்னியாகுமரி மாவட்டம். இந்த நாடு மிகப்பழமையான ஒரு நாடு. கி.மு. 3000-ஆம் ஆண்டிலேயே அரேபியர்களும், எபிரேயர்களும், எகிப்தியர்களும் மற்றும் மத்திய தரைக்கடல் நாடுகளும் இந்நாட்டோடு வணிகத் தொடர்பு இருந்ததாக வரலாற்றுக் குறிப்புகளில் காண முடிகிறது. குறிப்பாக யானைத் தந்தம்,

சந்தனக்கட்டை, வாசனைப் பொருட்கள், சில்க் மற்றும் பருத்தி ஆடைகள் பெருமளவில் ஏற்றுமதி செய்துள்ளனர். இந்நாடு இயற்கை வளமிக்க செழுமையான நாடு என்றும், இந்தியாவிலேயே மிக அழகிய நாடு (Loveliest Country) என்றும், தெய்வத்தின் நிறைவைப் பெற்ற நாடு (Here is God's Plenty) என்றும் பெயர்பெற்றது.

## திருவாங்கூர் இந்து இராஜ்யமாயிற்று

இராஜா மார்த்தாண்ட வர்மா ஜனவரி மாதம் 1750-ஆம் ஆண்டு தன்னுடைய இராஜ்யத்தை திருவனந்தபுரத்திலுள்ள ஸ்ரீ பத்மநாபா ஆலயத்திலுள்ள தலைமை தெய்வத்திற்கு அர்ப்பணம் செய்தார். தனக்கு ஸ்ரீ பத்மநாபதாசா (Servant of Padmanabadasa) என்ற பட்டப்பெயரையும் (Title) உண்டாக்கிக் கொண்டார். 10-ம் நூற்றாண்டில் பிராமணர்கள் இந்நாட்டில் குடியேற ஆரம்பித்தனர். இராஜ பரம்பரையினருக்கு அவர்கள் நெருக்கமானார்கள். இராஜா மார்த்தாண்ட வர்மா தன்னுடைய நாட்டை ஒரு இந்து இராஜ்யமாகப் பிரகடனப்படுத்திக் கொண்டார். இராஜா மார்த்தாண்ட வர்மா தன்னுடைய நாட்டை ஸ்ரீபத்மநாபா என்ற தெய்வத்திற்கு அர்ப்பணித்ததிலும், இந்து இராஜ்யமாகப் பிரகடனப்படுத்தியதிலும் பிராமணர்களில் செல்வாக்கு இருப்பதாக கருதப்பட்டது. இராஜா ஸ்ரீபத்மநாபா என்ற தெய்வத்தின் பிரதிநிதியாகக் கருதப்பட்டதால், இராஜாவிற்கு விரோதமாக யாரேனும் பேசினால், அது சாமி துரோகம் என்றும், தெய்வ தூஷணம் (Blasphemy Against the Deity) என்றும் கருதப்பட்டு கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டன.

## ஜாதிப்பிரிவினையும் தாழ்த்தப்பட்டோர் ஒடுக்கப்பட்ட நிலவரமும்

ஆளுகிறவர்களின் வட்டத்தில் பிராமணர்களின் செல்வாக்கு வளர ஆரம்பித்ததும் ஜாதிப்பிரிவினைகள் பிரச்சனையாக உருவாக ஆரம்பித்தது. ஆலய வழிபாடுகளை நடத்தும் ஆசாரியர்களாகவும், வேத பண்டிதர்களாகவும், மார்க்க சட்டதிட்டங்களை உருவாக்குபவர்களாகவும் இருந்தபடியால், உயர் குலத்தவர்கள் என்று கருதப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டோரை மிகக் கேவலமாகவும், அற்பமாகவும், கொடூரமாகவும், மனிதாபிமானமற்ற வகையிலும் நடத்தினார்கள். தாழ்த்தப்பட்டோர் செருப்பு அணியக் கூடாது. குடைகள் உபயோகிக்கக் கூடாது. பால் கறக்கக் கூடாது, மாடிவீடு கட்டக்கூடாது. கூரைக்கு மண் ஓடு மட்டுமே பயன்படுத்த வேண்டும். பெண்கள் நகை அணியக்கூடாது. இடுப்புக்குமேல் எந்த ஆடையும் அணியக்கூடாது. கீழே உள்ள ஆடையும் இடுப்பிலிருந்து முட்டுவரைதான் அணிய வேண்டும். முண்டு என்று சொல்லப்படுகிற துணியைத்தான் அவர்கள் இடுப்பில் கட்டிக் கொள்ள வேண்டும். ஆண்கள் மீசை வளர்க்க வேண்டுமானால் அனுமதி பெற வேண்டும். அதற்கு தனியாக வரி செலுத்த வேண்டும். அதேபோல, தலைப்பாகை அணிய வேண்டுமானாலும் அனுமதி பெற வேண்டும். வரிசெலுத்த வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், தாழ்த்தப்பட்டோர் உயர்குலத்தோருக்கு அடிமையாக வாழ்ந்தனர். சிறிய குற்றத்திற்கும் மிகக் கொடூரமான தண்டனைகளை அனுபவித்தார்கள். தாழ்த்தப்பட்டோர் கொல்லப்பட்டாலும் கூட நீதி கேட்க நாதியற்ற நிலையிலிருந்தனர்.

## மெய் தெய்வத்தைத் தேடிய மயிலாடி வேதமாணிக்கம்

இந்த சூழ்நிலையில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த திருவாங்கூர் நாட்டின், மயிலாடி கிராமத்திலிருந்து மகராசன், பெருமாள் என்ற இருவர் காவி உடை அணிந்து சிதம்பரம், தஞ்சாவூர் ஆகிய இடங்களுக்கு புனித யாத்திரை சென்றனர். அவர்களுடைய நோக்கம் மெய்யான தெய்வத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்பதுதான். சிதம்பரம் சென்றுவிட்டு தஞ்சாவூர் சென்றனர்.

தஞ்சாவூர் இந்து சமயக் கோட்டையாகவும், தமிழ் நாகரீகத்தின் தொட்டில் என்றும் கருதப்பட்டது. 1799-ஆம் ஆண்டு ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில் இருவரும் தெருவில் நடந்து சென்றுகொண்டிருந்த போது, இனிமையான பாடல்களைக் கேட்டனர். பாடல் வந்த திசை நோக்கிச் சென்றனர். அழகான ஒரு தோட்டத்தின் மத்தியில் ஒரு சிறிய கட்டிடம். ஆண்களும், பெண்களும் தரையில் உட்கார்ந்திருந்தனர். பின் வரிசையில் இவர்களும் சென்று அமர்ந்தனர். மிகவும் மதிக்கத்தக்க தோற்றமுள்ள வெள்ளைக்காரர் பிரசங்கம் பண்ண ஆரம்பித்தார். அவர் தமிழிலேயே பேசினார்.

தான் கையில் வைத்திருக்கும் புத்தகம் புனித வேதாகமம் என்றும், பாவியாகிய ஒரு மனிதனுக்கு மெய்யான சமாதானத்தையும், இரட்சிப்பையும் அருள இயேசு கிறிஸ்துவால் மட்டுமே கூடும். ஏனெனில், அவர் ஒருவரே மனுக்குலத்தின் பாவத்தை தன்மேல் ஏற்றுக்கொண்டு, பாவத்தின் தண்டனையாகிய மரணத்தையும் ஏற்று சிலுவையில் இரத்தம் சிந்தி ஜீவனைக் கொடுத்தார். அந்த தியாக இரத்தம்தான் மனிதனை பாவத்திலிருந்து விடுதலை கொடுக்க முடியும் என்று மிக உருக்கமாகப் பேசினார். அந்த இயேசுவண்டை வாருங்கள் என்ற அழைப்பினைக் கொடுத்தார். கூட்டம் முடிந்தபின் அவர் அவர்களோடு பேசினார். அவர் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த Rev. J.J.G. கோல்கோஃப் (Kohl Hoff) என்ற மிஷனெரி, அவர்கள் மகராசனுக்கு “மெய் ஞானம்” என்ற ஒரு புத்தகத்தையும் கொடுத்து, அதைப் படித்து முடித்து விட்டு பத்து நாட்கள் கழித்து தன்னைப் பார்க்கும்படி அந்த மிஷனெரி கூறினார். இருவரும் இயேசு கிறிஸ்துவே பாவங்களை மன்னித்து இரட்சிக்கிறவர் என்பதை விளங்கிக் கொண்டனர். அவர்கள் பாவ அறிக்கை செய்து ஞானஸ் நானம் பெற்றுக் கொண்டனர். மகராசன் பின்நாட்களில் வேத மாணிக்கம் என்றும், பெருமாள் ஞானமுத்து என்றும் பெயர் பெற்றனர். அவர்கள் இருவரும்தான் திருவாங்கூர் நாட்டின் முதல் புராட்டஸ்டான்ட் கிறிஸ்தவர்கள். அவர்கள் சொந்த ஊராகிய பள்ளியாடியில் தாங்கள் அறிந்து கொண்ட இயேசு கிறிஸ்துவை அறிவிக்க ஆரம்பித்தனர். ஆரம்பித்ததில் அநேகர் எதிர்ப்பு தெரிவித்தாலும் பின் நாட்களில் எதிர்ப்பு குறைந்து, 30 பேர் இயேசு கிறிஸ்துவையும், அவர் அருளும் இரட்சிப்பையும் விளங்கிக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றனர். வேதமாணிக்கம், ஞானமுத்து ஆகியோரின் முயற்சியால் தெற்கு திருவாங்கூர் பகுதியில் கிறிஸ்தவம் ஆரம்பித்தது.

## *திருவாங்கூர் வந்த முதல் மிஷனெரி*

ரிங்கெல் டௌபே ஜெர்மனி தேசத்திலுள்ள சிலிசியா என்ற நகரில் 1770-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ல் பிறந்தார். தனது 18-வதுவயதில் கிறிஸ்தவத்தை அறியாத நாடுகளிலுள்ள மக்கள் மத்தியில் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க வேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்டு, உள்ளூரிலுள்ள ஒரு ஆலயத்தில் போதகராகப்பணியாற்றினார். லண்டன் மிஷனெரி சொசைட்டி அவரைத் தென் இந்தியாவுக்கு மிஷனெரியாக அனுப்பியது. 1804-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-இல் கடல் மார்க்கமாக தரங்கம்பாடி வந்து சேர்ந்தார். அப்போதிருந்த தென் திருவாங்கூர் பகுதியில் தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தில் மிஷனெரிப் பணிசெய்ய விரும்பினார். அதற்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளும் வகையில் மலையாள மொழியைக் கற்றுக் கொண்டார். 1806-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ல் தென் திருவாங்கூர் பகுதியில் சுவிசேஷப் பணியாற்ற விரும்பி, ஆராம்பொளி கணவாய் வழியாக அகஸ்தீஸ்வரம் தாலுகா மயிலாடிக்குச் சென்று அதை மையமாக வைத்து பணிகளைத் தொடங்கினார். 10 ஆண்டுகள் அங்கிருந்து அநேக நாடார் சமூகத்தினரை கிறிஸ்துவுக்குள் நடத்தினார். அவர் மூலம் வேறு சமூகத்தினரையும் கிறிஸ்துவுக்குள் நடத்தினார்.

ஆனால் பின் நாட்களில் அவர்கள் சிலர் இரட்சணிய சேனை (Salvation Army) அமைப்பிலும், சிலர் பெந்தெகோஸ்தே அமைப்பிலும் சேர்ந்தனர். அவர் அங்கு பணியாற்றிய காலத்தில் ஏழை மக்களோடு மிகுந்த பரிவோடு பழகி, அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களானாலும் அவர்களுக்கும் உதவி செய்து, அவர்களுடைய அன்பையும், நல்லெண்ணத்தையும் பெற்றுக்கொண்டார். மயிலாடியிலுள்ள வேதமாணிக்கமும், மற்றவர்களும் மயிலாடியில் ஒரு ஆலயத்தைக் கட்டி எழுப்ப விரும்பினார்கள். அதற்கு அனுமதிப் பெற்றுத் தரும்படியும் ரிங்கெல் டௌபேயைக் கேட்டுக் கொண்டனர். அவர் அப்பொழுது, கொச்சியிலிருந்த ரெசிடெண்ட் கேனல் மெக்காலேயைச் சந்தித்து மயிலாடியில் ஆலயம் கட்ட மக்கள் விருப்பத்தைச் சொல்லி அனுமதி பெற்றுத்தரக் கேட்டார். அவரும் அதற்கு இசைந்து 1806-ஆம் ஆண்டு மே 15-ஆம் நாள் கொல்லத்தில் திருவாங்கூர் அரசின் திவானாகயிருந்த வேலுத்தம்பியைச் சந்தித்து பேசினார்.

– தொடரும்

("தென் தமிழகத்தில் கிறிஸ்தவ மிஷனெரிகள்" என்ற புத்தகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.)

# ஜெபியுங்கள்! துதியுங்கள்!!

1. கடந்த ஜனவரி மாதம் 13-ஆம் தேதியிலிருந்து 17-ஆம் தேதி வரை பெங்களூர் BSI-இல் நடைபெற்ற மொழிபெயர்ப்பு பயிற்சியில் IBT-இன் சித்தி மொழிபெயர்ப்பாளரும் பங்கு பெற்று, நல்ல ஆலோசனைகளையும், மொழிபெயர்ப்பு குறித்த விளக்கங்களையும் அறிந்து கொண்டதற்காக தேவனைத் துதியுங்கள். இவருக்கு மேலும் பலவித பயிற்சிகளைக் கொடுக்க வேண்டியுள்ளது என BSI-யிலிருந்து கடிதம் வந்துள்ளது. தேவைப்படும் அனைத்துப் பயிற்சிகளிலும் கலந்து கொண்டு, சித்திக் மொழியில் புதிய ஏற்பாடுபணிகளை சிறப்பாகவும், பிழையின்றியும் முடிக்கப்பட ஜெபியுங்கள்.

2. IBT-இல் பணிபுரியும் மொழிபெயர்ப்பாளர்கள் தங்களுக்குரிய மொழியில் அவர்கள் மூலமாக வேதாகமத்தை தாய்மொழியில் முடித்து, அம்மொழி பேசும் மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்ற தாகம், வாஞ்சை ஒவ்வொரு மொழி பெயர்ப்பாளர்களுக்கும் பாரத்துடன் விளங்க ஜெபிப்போம்.

3. IBT ஊழியத்தின் மூலமாக வெளியிடப்பட்ட அநேக மொழி பேசும் புத்தகங்கள் அந்தந்த மொழிபேசும் மக்களுக்கு, மொழி பெயர்ப்பாளர்கள் மற்றும் மிஷனெரிகள் மூலமாக விநியோகிக்கப்பட்டதற்காக கர்த்தரைத் துதியுங்கள். இவர்கள் பணிகள் இதோடு முடிந்து விட்டது என்ற எண்ணம் கொள்ளாமல், அலுவலகத்திலிருந்து கூறப்பட்டபடி எப்படி வாசிப்பது, புரிந்து கொள்வது, தியானிப்பது குறித்தும், தெளிவில்லாத மக்களுக்கு விளக்கிக் கூற வேண்டியதும் கல்வியறிவு இல்லாதவர்களுக்குக் கல்வியறிவைக் கொடுப்பதும் மேலான கடமையாகும். இதை உணர்ந்து செயல்பட ஜெபிப்போம்.

4. பிற மாநிலத்திலிருக்கும் மொழி பெயர்ப்பாளர்களை சிறு குழுக்களாக கோவை IBT அலுவலகத்திற்கு வரவழைத்து, தங்கள் பணிகளை இங்கிருந்து செயல்படுத்தும்போது, வேலையின் திறன், அளவும் அதிகரிப்பதற்காக கர்த்தரைத் துதியுங்கள். இங்கு வந்து செய்யும் அதே மாதிரியை தங்கள் பணித்தளங்களிலும் செய்ய வேண்டும் என்ற அர்ப்பணிப்பை கர்த்தர் அவர்களுக்கு அருளிச்செய்ய ஜெபியுங்கள்.

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

1. **STATE BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

2. **INDIAN BANK**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

BHIM | UPI
BHARAT INTERFACE FOR MONEY | UNIFIED PAYMENTS INTERFACE

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

# கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | சோர்வும் தீர்வும் | ரூ. 60/- |
| 4. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 5. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 6. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 7. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 8. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 9. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 10. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 11. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 12. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 13. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 14. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 15. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |
| 16. | இதய கீதங்கள் (பாடல் புத்தகம்) | ரூ. 60/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/–ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS

**CENTRAL BANK OF INDIA**

A/c. No. : 1630413107
Name : Word Publishers Trust
Branch : Kalapatti
IFS Code : CBIN0282057

**SCAN & PAY**

Address :

**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.

## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.
வருட சந்தா ரூபாய். 100/–

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


Editor & Published by On behalf of: **Mr. K. JAISINGH**
**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.

Printed by: **Mr. C.K. VENKATESH**
Chandra Prabha Press
113-118, V.H. Road, CBE-1.




## STATEMENT OF OWNERSHIP

## SATHTHIYA VAARTHAI

**RNI No. 82166**

| | | |
|---|---|---|
| Place of Publication | : | **WORD PUBLISHERS TRUST**<br>14, Ashok Layout,<br>Civil Aerodrome Road,<br>Coimbatore - 641 014. |
| Periodically | : | Monthly |
| Printer | : | Mr. C.K. Venkatesh for<br>M/s. Chandra Prabha Press |
| Nationality | : | Indian |
| Printer's Address | : | **CHANDRA PRABHA PRESS**<br>113-118, V.H. Road, .<br>Coimbatore - 1. |
| Publisher & Editor | : | **Sri. K. JAISINGH**<br>(For Word Publishers Trust) |
| Nationality | : | Indian |
| Address | : | **WORD PUBLISHERS TRUST**<br>14, Ashok Layout,<br>Civil Aerodrome Road,<br>Coimbatore - 641 014. |

I, Sri. K. Jaisingh hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date : 01-03-2025
Place : Coimbatore - 641 014

(Sd/-) Jaisingh
Signature of the Publisher

Send all your Contributions :
**Cheques / DD / M.O. to**

**INDIAN BIBLE TRANSLATORS**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
**Web : www.ibtword.com**


**SATHTHIYA VAARTHAI - TAMIL**

Date of Publishing : 2nd & 3rd March 2025
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**

**RNI No. 82166**